பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ பங்குனி ௴ 30 உ. சனிக்கிழமை [13-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 131

# இலங்கை இனப் பிரச்சினை:

# தலையிட மலேசியா விருப்பம்!

## விடுதலைப் புலிகளுக்கு தகவல் அனுப்பியுள்ளதாக கிட்டு பேட்டி

சென்னை, ஏப்ரல் 13

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்து வைக்க மலேசிய அரசு விரும்புகிறது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவதாக மலேசிய அரசு புலிகளுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறது.

லண்டனில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) "இந்து" நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்விவரம் வெளியாகியிருக்கிறது.

இலங்கை இனப் பிரச்சினையில் மலேசிய அரசு அக்கறை காட்டுவதை உறுதிப்படுத்திய திரு கிட்டு, பேச்சு நடத்த மலேசிய அரசு விடுத்திருக்கும் அழைப்புக்கு என்ன பதில் தருவது என்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் இன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டுவில் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சு

சாவகச்சேரி, ஏப். 13

நீண்ட நாட்களின் பின்னர் நேற்று சாவகச்சேரிப் பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மட்டுவில் வடக்கு மானாவளையிலும், பிற்பகல் 3 மணியளவில் சரசாலை வடக்கிலும் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

விடுமுறையை ஒட்டி பாடசாலை நேற்று நேரத்துடனேயே மூடப்பட்டு விட்டதால் முன்கூட்டியே மாணவர்கள் வீடு சென்றுவிட்டனர். இதனால் பெரும் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது.

பாடசாலை ஓரளவு சேதமடைந்தது. அப்பகுதியில் ஒரு கடையும் வீடும் சேதமுற்றன. தென்னை, பனை மரங்களும் முறிந்து விழுந்தன.

சரசாலை வடக்கிலும் ஒரு கடை, ஒரு வீடு என்பன சேதமடைந்தன. [ஓ-31-117-15]

## புதுக்குடியிருப்பிலும் அவ்ரோ குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 13

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு — இரணைப்பாலை, கோப்பாவில் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அவ்ரோ விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

புதுக்குடியிருப்பு—இரணைப்பாலையில் வீசப்பட்ட 3 குண்டுகளினால் கணவன், மனைவி உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

இரணைப்பாலையைச் சேர்ந்த வைத்தி [70 வயது] அவரது மனைவி திருமதி இந்திராதேவி [60 வயது] மற்றும் யோ. மரியதாஸ் [45 வயது] ஆகிய மூவருமே உயிரிழந்தவர்களாவர்.

கோப்பாவில் பகுதியில் ஒரு குண்டு வீசப்பட்டது. [ஓ-5]

## காரைநகரில் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 13

காரைநகர்ப் பகுதியில் நேற்று முற்பகல் 11.45 மணியளவிலும், பிற்பகல் 2 மணிக்குப் பின்னரும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

ஊர்காவற்றுறை முகாமில் இருந்தும் காரைநகர்ப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் நீலன்காடு பகுதியூடாக படையினர் வெளியேற முற்பட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி படையினரைப் பின்வாங்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சை:

## புலிகளிடம் அனுமதி பெறுமாறு படை அதிகாரிகள் அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 13

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில், ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சையை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் அனுமதியையும் ஒத்துழைப்பையும் பெறுங்கள்!"

இவ்வாறு விசேட பரீட்சை சம்பந்தமாகக் கொழும்பில் நடந்த மாநாட்டில், தமிழ்ப் பகுதிகளில் இருந்து கலந்துகொண்ட கல்வி அதிகாரிகளுக்குப் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கினர்.

மாவட்டங்களுக்குத் திரும்பியதும் புலிகள் தலைவர்களுடன் இது குறித்துப் பேசுங்கள்—என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை நடந்த பிரஸ்தாப மாநாட்டில் கல்வித் திணைக்களம், பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் பாதுகாப்புப்படை அதிகாரிகளும், தமிழ் மாவட்டங்களில் இருந்து வந்த கல்வி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

போரூட், றெட்பானா, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

வினாத் தாள்கள், விடைத் தாள்களை எடுத்துச் செல்லுதல், திரும்ப எடுத்து வருதல் ஆகிய வேலைகளைச் செய்வதற்குத் தொண்டர் நிறுவனங்கள் சம்மதம் தெரிவித்தன. [அ-3]

பரீட்சை அட்டவணை 3 ஆம் பக்கத்தில்

### முச்சந்தி முரளி



உண்ணாவிரதம் இருக்க இவ்வளவு சஷ்டப்பட்டு உந்தளவு செலவழிச்சு அங்கையே போகவேணும்......;

## ஈச்சமோட்டையில் நேற்று பலாலி ஷெல்கள் விழுந்தன

### இரு பெண்கள் பலி: நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 13

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

குடியிருப்புப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்ததால் இரு பெண்கள் உயிரிழந்தனர்; மற்றும் நால்வர் காயமடைந்தனர்; இரு வீடுகளும் சேதமுற்றன.

இரு குடும்பங்களைச் சேர்ந்த துரைராஜா கோணேஸ்வரி [வயது 51], அந்தோனிப்பிள்ளை திரேசம்மா [வயது 56] ஆகிய இரு பெண்களுமே ஷெல் வீச்சில் மரணமானவர்கள் ஆவர்.

இறந்தவரான கோணேஸ்வரியின் பிள்ளைகளான இந்துலதா [வயது 20], உதயராஜ் [வயது 17], இறந்த திரேசம்மாவின் கணவரான அந்தோனி... வின் குணரட்ணம் அந்தோனிப்பிள்ளை [வயது 62], மற்றும் மரியாம்பிள்ளை லூட்ஸ் மேரி [வயது 53] ஆகியோரே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாண்டியன்தாழ்வு, வண்ணார்புரம், பாஷையூர் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஒரு ஷெல் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

[ஓ-15-3-80-5]

## 18 இலங்கையருக்கு தஞ்சம் தர பிரான்ஸ் மறுப்பு

### விமானத் தளத்தில் உண்ணாவிரதம்

பாரீஸ், ஏப். 13

18 இலங்கையருக்கு அரசியல் தஞ்சம் வழங்குவதற்கு பிரெஞ்சு அரசு மறுத்துவிட்டதாக நேற்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

உரிய ஆவணங்கள் இன்றி அவர்கள் அண்மையில் பாரீஸ் விமான நிலையம் வந்தடைந்தனர்.

இந்த 18 பேரையும் நாட்டிற்குள் பிரவேசிக்க பிரெஞ்சு அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் விமான நிலையத்தில் உண்ணாவிரதம் இருந்தனர். அதன் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர்.

## பொறுப்பதிகாரி மரணம்

கொழும்பு, ஏப். 13

அண்மையில் தலைமன்னாரில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 9 பொலீஸாரில் தலைமன்னார்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ், ஆங்கிலம் Standard Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு பியூட்டோ என்ரபிறைஸஸ் 39/17, மின்சார நிலைய வீதி, 6ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [பஸ் நிலையம் முன்பாக] [இ-4826]

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமநாதன் F. R. C P., D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது: கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி, போன்ற அனைத்து சுகாதாரம் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம்: வெளியீடு: உதயன் வெளியீட்டகம்; விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4822]

### புத்தக விற்பனை

English Practice Through Tamil Medium தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி ஆண்டு 10, 11க்குரியது. ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு அரிய கைநூல். ஆறு வருடங்களுக்குரிய G C. E. [O/L] பயிற்சிகள் அடங்கியது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். ஆசிரியர் M. K. தில்லைமோகன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ/5934]

### JAFFNA TUTORIAL COLLEGE

யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி 341, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1 - 3 - 1991 தொடக்கம் ஆங்கில, தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் நடைபெறுகின்றன. வகுப்புகள் நடைபெறும் நேரம் காலை 8-00 மணி தொடக்கம் 12-00 மணி வரை மாலை 1-00 தொடக்கம் 6-00 மணி வரை. [16329]

### கோழி முட்டைகள்

பெண்டம் Bantom கோழி முட்டைகள் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 15/- 131/1, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். [16334]

### திருமண சேவை

கனடா, சுவிஸ், பிரான்ஸ் நாட்டுக் குடியுரிமை பெற்ற மணமகன்கள் இவ்விடம் வந்து திருமணம் முடிந்ததும் கூட்டிச்செல்வார்கள் தகுந்த பெண்கள் தேவை. கு. திருவிளங்கம், 16/16, வளன்புரம் கொழும்புத்துறை. [16421]

### மணமக்கள் தேவை

யாழ்ப்பாண இந்து கொழும்பில் வேலை செய்யும் 40 வயது மணப்பெண்ணுக்கும், ஏ. எல். ஆசிரியையாகக் கடமையாற்றும் 27வயதுப் பெண்ணுக்கும் தேவை. எம்மிடம் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [16418]

### தவறிவிட்டது

எயர் மெயில் கவர் ஒன்றுக்குள் வைத்திருந்த 'சிறீதரன் பிரதர்ஸ்' என்ற பெயரில் உள்ள சட்டடத்திணைக்கள அரசாங்கப் பற்றுச் சீட்டு ஒன்று இராசாவின் தோட்டறோட்டுக்கும், நல்லூர் கந்தசாமி கோயில் கற்றாடலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். [16333]

---

## 31 ஆம் நாள் நினைவு



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 09 | 14 |
| 11 | 03 |
| 1922 | 1991 |

சரவெட்டியை பிறப்பிடமாகவும், தும்பளையை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் சீ. மரியாம்பிள்ளை

[ஓய்வுபெற்ற அதிபர்]

நீங்காத உம் நினைவு
எம் நெஞ்சத்தை வாட்டுதையா!
சீவியத்தில் எம்மை நேசித்தீர்
மரணத்தில் உம்மை மறவோம்.

14 - 03 - 1991 அன்று கேரதீவில் அகால மரணம் அடைந்த எம் அன்புத் தந்தையின் மரணச் செய்தியை அறிவித்து எமக்கு உதவி புரிந்த தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினருக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், கண்ணீரஞ்சலி வெளியிட்டும், எம் தேவையறிந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள். வல்வை மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், புனித மரியாள் சனசமூக நிலையத்தினர் அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று [13-04-1991] அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனைகளிலும், மாலை மரியாள் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற் பலியிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குடும்பத்தினர்.

தும்பளை,
பருத்தித்துறை. [16407]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா இராசரத்தினம்

[இளைப்பாறிய பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 2 - 1923 | 14 - 3 - 1991 |

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், அறிவின் ஒளிவிளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

''சந்திர வாசா''
சபாபதிப்பிள்ளை வீதி,
[வெள்ளை வீதி]
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். [16328]

---

★ மீண்டும் ஆரம்பமாகின்றது

## புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

### 91 A/L

பகல் நேர வகுப்பு

### DAY CLASS

துரித மீட்டல் வகுப்புகளும்,
வினா - விடை வகுப்புகளும்

| | | |
|---|---|---|
| Physics | — | திரு. நந்தகுமார் |
| Chemistry | — | திரு. சண்முகசுந்தரம் |
| Botany | — | திரு. குணசீலன் |
| Zoology | — | பிரபல ஆசிரியர் |
| Pure | — | திரு. வெக்டர் |
| Applied | — | திரு. சந்திரமோகன் |

ஆரம்பம்:- 15-04-1991

திங்கட்கிழமை காலை 9 00 மணி

[இ-5946]

---

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

**A/L 92** புதிய பிரிவு

**A/L 91** மீட்டல் வினா-விடை வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| இந்துநாகரிகம் | — | திருமதி கிருஷ்ணா |
| புவியியல் | — | திரு யோசப் |

ஆரம்பம்:- 13 - 04 - 1991

9-00 a. m.

★ பொருளியல் மீட்டல் வினா - விடை

[சி/4829] சனி 5- 00 p. m.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 | 14 |
| 09 | 03 |
| 1911 | 1991 |

### அமரர் இ. சேனாதிராசா

[கிளாக்கர் ஐயா]

[முன்னாள் பிரதம எழுத்தர், காரியாதிகாரி பணிமனை, யாழ்நகர்]

வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பெருக்கி
தாழ்விலா வாழ்வு எமக்குத் தந்து
நோய்வாய்ப்பட்டு நொந்து நீ வாடாது
தேய்விலாப் பெருவாழ்வு சிறக்க எய்தி நின்றாய்
வையம் உள்ளளவும் நின் நினைவு
மையம் எம் மனத்து என்றும்-

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

34, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [சி/5948]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் மீண்டும் ஜே.வி.பி. இயக்கம்

## புத்துயிர் அளிக்க புதிய செயற்குழு அமைப்பு

கொழும்பு, ஏப்ரல் 13

தென்பகுதியில் ஜே. வி. பி இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்றிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொல்லப்பட்ட பின்னர், கைதாகாமல் மறைந்து திரியும் ஜே. வி. பி. இயக்கப் பிரமுகர்கள் சிலர் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூட்டம்ஒன்றை நடத்தினர் என்றும் —

அதனைத் தொடர்ந்து ஜே. வி. பிக்கு புத்துயிர் அளிக்க தற்காலிக இணைப்புக் குழு ஒன்றை அவர்கள் அமைத்தனர் என்றும் தெரிய வருகிறது.

அக்குழுவின் செயலாளராக சிசிர என்பவர் செயற்படுகின்றார் என்றும் கூறப்படுகிறது.

அக் கூட்டத்தில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன. அவையாவன:-

★ அழிவுச் சக்திகளுக்கும் பிற்போக்குவாதிகளுக்கும் எதிரான போராட்டதை நடத்த ஜே. வி. பி. உறுதி பூண்டுள்ளது.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை நீக்க அரசை நிர்ப்பந்திப்பது.

★ சிதறிக் கிடக்கும் இயக்க உறுப்பினர்களை ஒன்று திரட்டுவது.

★ கொல்லப்பட்ட மற்றும் காணாமற் போனவர்கள் பற்றி ஆய்வு ஒன்றை நடத்தி, அந்த விவரங்களை அறிக்கையாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வெளியிடுவது.

★ 'நியமுவ' என்ற பெயரில் மாதச் செய்திக் கடிதம் என்ற பிரசுரத்தை வெளியிடுவது.

★ சந்தர்ப்பவாத சக்திகளை தோற்கடிக்கும் போராட்டம் ஒன்றை நடத்த உறுதி பூண்டு செயற்படுவது.

இதே வேளை —

1971—1991 காலகட்டத்தில் உயிரிழந்த ஜே. வி. பியினரின் நினைவாக 22 பக்க கறுப்பு—வெள்ளை நிறப் புத்தகம் ஒன்றை ஜே. வி. பியினர் வெளியிட்டுள்ளனர்.

அதில் ரோஹண விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்கா, விஜயதாஸ லியனாராச்சி ஆகியோரின் படங்களும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பியின் புதிய தலைவர், இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ள சோமவன்ஸ அமரசிங்க என்று நம்பப்படுகிறது. [உ-எ]

## எனது பதவிக் காலத்தில் பிரச்சினையைத் தீருங்கள்!

### புலிகளுக்கு பிரேமா அழைப்பு

கொழும்பு, ஏப். 13

எனது பதவிக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

பதுளையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு குறிப்பிட்டார்.

"எனது பதவிக் காலத்தில் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் தவறினால், எதிர்காலத்தில் என்றுமே அவர்களால் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத நிலைதான் ஏற்படும்"— என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை— லக்ஸபானவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர்.

"பிரிவினைப் போராட்டத்தில் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் பங்குபற்றியிருப்பின், தற்போதைய சண்டை வடக்கு - கிழக்குடன் நிற்காது மலையகத்திலும், ஏற்பட்டிருக்கும்"— என்று அவர் சொன்னார். [உ-எ]

---

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

15 - 04 - 1991 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யா/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் புத்தூர் கொத்தணி அதிபர் திரு. வே. சந்திரசேகரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

-செயலாளர்.

[16402]

---

அரசாங்க அறிவித்தல்

## சுகாதார சேவைகள்

யாழ்ப்பாண / கிளிநொச்சி மாவட்டங்களில் கீழ்க் குறிப்பிட்ட வைத்திய சாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரிய ஓய்வு பெற்ற பதிவு வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டம்:-

1. மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை [தற்காலிகமாக வேலணை மகாவித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது]
2. மத்திய மருந்தகம், முள்ளியான்.

கிளிநொச்சி மாவட்டம்:-

1. மத்திய மருந்தகம் — முழங்காவில்
2. மத்திய மருந்தகம் — கந்தாவளை

சம்பள விபரம் விண்ணப்பதாரர்களுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

பி. சு. சே. ப. பணிமனை
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
12 - 04 - 91.

ந. கனகசபை
பிராந்திய சுகாதார
சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[ச/5101]

---

## யுத்தநிறுத்தம்: சிறில் ரணதுங்க கருத்து

கொழும்பு, ஏப். 13

வருடப்பிறப்பு அன்று யுத்த நிறுத்தம் அமுல் நடத்தப் படுமா என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் கொழும்புச் செய்தியாளர்கள் கேட்டனர்.

அப்போது அவர் சொன்னதாவது:-

"வருடப் பிறப்பு அன்று யுத்த நிறுத்தம் பற்றி அந்தந்தப் பகுதித் தளபதிகளே முடிவு செய்வர்.

தாக்குதல் தொடரும் போது யுத்த நிறுத்தம் பற்றி எப்படிக் கேட்க முடியும்?" என்றார் அவர். [ஓ-எ]

---

Personal
New
Seience Centre
Elilakam Front Lane,
JAFFNA.
கணித, விஞ்ஞான
A/L 91
துரித மீட்டலும்
வினா - விடையும்
ஆரம்பம்: 13—04—1991
சனி காலை 6-30 மணி
கணித, விஞ்ஞான
A/L 91 & 92
புதிய பகுதிகள்
ஆரம்பமாகி விட்டன.

---

# விசேட பரீட்சை நேர அட்டவணை

யாழ்ப்பாணம், ஏப். 13

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. பரீட்சைக்கான நேர அட்டவணை முதற்கட்டமாக இம்மாதம் 30ஆம் திகதி வரைக்குமே தயாரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு வாரம் நடப்பதற்குரிய பாடங்களுக்கே இதுவரை வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன என்றும் —

மிகுதி பன்னிரண்டு நாட்களிலும் நடத்தப்பட உள்ள பாடங்களுக்கு வினாத்தாள்கள் இன்னும் அச்சிடப் படாமையினால், அவற்றுக்குரிய நேர அட்டவணை இரண்டாம் கட்டமாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் —

பரீட்சை ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் ஒழுங்குகளைக் கவனிக்கச் சென்று திரும்பிய யாழ். கல்விப் பகுதி அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

முதற்கட்ட - எட்டு நாட்களுக்கும் உரிய நேர அட்டவணை வருமாறு:-

| | | |
|---|---|---|
| 23-4-91 | 8-30 — 10-30 | விலங்கியல் - I |
| | 8-30 — 11-30 | பிரயோக கணிதம் - I |
| | | சரித்திரம் - II |
| | 1-30 — 4-30 | சரித்திரம் - I |
| 24-4-91 | 8-30 — 11-30 | பிரயோக கணிதம் - II |
| | | விலங்கியல் - II |
| | | கிரேக்க உரோம நாகரீகம் - I |
| | | சித்திரம் - I |
| | 12-30 — 3-30 | மனைப்பொருளியல் - I |
| | | இலத்தீன் - I |
| 25-4-91 | 8-30 — 11-30 | தூயகணிதம் - I |
| | | பௌத்த நாகரீகம் - I |
| | 12-30 — 3-30 | மனைப்பொருளியல் - II |
| | | இலத்தீன் - II |
| 26-4-91 | 8-30 — 10-30 | தாவரவியல் - I |
| | 8-30 — 11-30 | தமிழ்மொழி - I |
| | | புத்தசமயம் - I |
| | 12-30 — 3-30 | தூயகணிதம் - II |
| | | பௌத்த நாகரீகம் - II |
| 27-4-91 | 8-30 — 11-30 | தாவரவியல் - II |
| | | தமிழ் - II |
| | | புத்தசமயம் - II |
| | 12-30 — 3-30 | சங்கீதம் — சிங்களம் - I |
| | | சங்கீதம் — கர்நாடகம் - I |
| | | சங்கீதம் — மேலைத்தேய - I |
| 29-4-91 | 8-30 — 10-30 | இரசாயனவியல் - I |
| | 8-30 — 11-30 | பொருளியல் - I |
| | | மலாய் - I |
| | | ஹிந்தி - I |
| | | பேர்சிய மொழி - I |
| | 12-30 — 3-30 | நாட்டியம் — பரதம் - I |
| | | நாட்டியம் — சிங்களம் - I |
| | | அரபு - I |
| | | ஜப்பானிய மொழி - I |
| 30-4-91 | 8-30 — 11-30 | இரசாயனவியல் - II |
| | | நாட்டியம் — சிங்களம் - II |
| | | நாட்டியம் — பரதம் - II |
| | | அரபு - II |
| | | ஜப்பானிய மொழி - II |
| | 1-30 — 4-30 | சங்கீதம் — கர்நாடகம் - II |
| | | சங்கீதம் — சிங்களம் - II |
| | | சங்கீதம் — மேலைத்தேய - II |

## அனுமதி அட்டை தபாலில்

யாழ்ப்பாணம், ஏப், 13

வடபகுதியில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சி. ஈ [உயர்தர] பரீட்சையில் தோற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்று தபால் மூலம் அனுப்பப் பட்டுள்ளன.

கொழும்பு சென்றிருந்த கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இந்த அனுமதி அட்டைகளை தம்முடன் எடுத்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை—

பாடசாலை பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அதிபர்கள் மூலம் வழங்கப் படவிருக்கின்றன. [ஓ-3]

## பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப் 13

வடக்கு-கிழக்கில் திட்டமிட்டபடி எதிர்வரும் 23 ஆம்திகதி விசேட ஜீ. சி. ஈ. [உயர்தர] பரீட்சை நடைபெறும்.

பரீட்சை குறித்து யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளதாகவும்:

பரீட்சை வினாத்தாள்கள் மட்டுமே எடுத்துவர வேண்டியுள்ளது. ஏனைய வேலைகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன.

அனுமதி அட்டை, பரீட்சை நிலைய விவரம் மேற்பார்வையாளர் நியமனம் உட்பட சகல வேலைகளும் பூர்த்தியாகி விட்டன—

விடைத்தாள்களுக்குரிய காகிதாதிகளும் கொண்டு வரப்பட்டுவிட்டன—என்றார். [ஒ-3-15]

## தொழில் நுட்பப் பாட வர்த்தகவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

கனிஷ்ட பாடசாலை தொழில் நுட்பப் பாட வர்த்தகவியல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும்,

17 ஆம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்,

18 ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, வேலணை மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் கருத்தரங்கு நடத்தப் படும். [இ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஜேக்கப் எட்வேட் பொன்னையா

[இளைப்பாறிய அதிபர்]

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேக்கப் எட்வேட் பொன்னையா 12 - 04 - 91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி ஜேக்கப் தம்பு அவர்களின் ஏக புதல்வனும், தங்கரெத்தினத்தின் அன்புக் கணவரும், கோபாலபிள்ளை. திருமதி வினாநயசமூர்த்தி- செல்லம்மாவின் சகோதரனும் வில்லி, நிமலரஞ்சிதம் [கனடா], ஜெயகுணாளன் [ஜப்பான்], சத்தியதயாளன் [பிரான்ஸ்], சொர்ணவதனா [கனடா], தம்புநேசன் [பிரான்ஸ்], சொர்ணரூபன் [ஜேர்மனி], சர்வதயாபரன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்செல்வம் [பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நல்லூர்], ஆனந்தராஜன் [கனடா] பூரணம், சாந்தி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் றோய் சுதர்சன், ஜோசுல்தர்சன், யஸ்மின், நிலாணி, நியோமி, ஜெயசுதன்' சுதர்கினி, பிரதீபன், துஷான், டொறின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் ஆராதனை அவரது இல்லத்தில் சனிக்கிழமை [13 - 04 - 91] காலை 9-00 மணிக்கு நடைபெற்று புங்குடுதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்!
மனைவி, மக்கள்

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [16426]

---

திருமதி

## இரத்தினம் கதிரவேற்பிள்ளை

[புங்குடுதீவு. 3 ஆம் வட்டாரம்]

திருமதி இரத்தினம் கதிரவேற்பிள்ளை 12 – 04 – 1991 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற டாக்டர் கதிரவேற்பிள்ளை [மலேஷியா] அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் பாலசுப்பிரமணியம் [கனடா], திருமதி பரமேஸ்வரி பத்மநாதன், திருமதி கமலாதேவி கனகசபை ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன், கனகசபை, திருமதி சுகிர்தம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி. வாசுகி நவரத்தினம், இளங்கோ, நக்கீரன், ஆதிரை, பானினி, சாயீஸ்வரன் கௌசல்யா, அகஸ்யா. சஞ்சீவன், மேகலா ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-04-1991 சனிக்கிழமை மு. ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்! சு. கனகசபை.

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [16427]

---

## அருட் சகோதரி கொன்சலாற்றா

வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண் வரும், திருக்குடும்பசபையைச் சேர்ந்தவருமாகிய அருட் சகோதரி கொன்சலாற்றா அவர்கள் 12 – 04 - 1991 இல் பாஷையூரில் காலமாகிவிட்டார் அன்னாரின் இறுதிச் சடங்குகள், 13 – 04 – 1991 சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

மாகாணத் தலைவி,
தி. கு. மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.
[16428]

---

## பொன்னையா சுந்தரம்

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கோகுல வீதியில் வசித்தவருமாகிய பொன்னையா சுந்தரம் 10-4-1991 புதன்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா வள்ளியம்மை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும் ஆவார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற முருகேசு, சிவக்கொழுந்து, சோமசுந்தரம் [இளைப்பாறிய அதிபர்] ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார். கனகேந்திரன் [ஜெயா], சாந்தினி [கனடா], கிருஷ்ணகுமார் [சுவிற்சலாந்து], சுரேஸ்குமார் [சுவிற்சலாந்து] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பத்மகுமாரின் [நந்தன், கனடா] மாமனாரும், சுகித், பேபி [கனடா] ஆகியோரின் அம்மப்பாவும், காசிப்பிள்ளை, திருநாவுக்கரசு [பிரான்ஸ்], சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், அம்பிகைபாகனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-4-1991 இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புகழுடம்பு கோண்டாவில் அன்னங்கை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
செ. அம்பிகைபாகன்

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு. [16429]

---

## கொழும்பு புறப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப் 13

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தரித்து நின்ற தொண்டர் ஸ்தாபனங்களின் லொறிகளை படையினர் கொழும்பு செல்ல அனுமதித்தனர்.

தொண்டர் ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஐந்து லொறிகளும், பிக்கப் வாகனமும் நேற்று கொழும்பு புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## நெல் விலை வீழ்ச்சி!

கொழும்புத்துறை, ஏப். 13

பூநகரியில் நெல்லின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுறுத்தப்பெருமாள், பச்சைப்பெருமாள் நெல் ஒரு மூடை ஆகக் கூடியது 850 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இங்கு அண்மைக் காலங்களில் ஒரு மூடை நெல் ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. [உ-30]

## இயக்கச்சியில் ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஏப். 13

நேற்று அதிகாலை ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. [ஒ-3]

## புதுவருடத்தில் மழை அதிகம்

யாழ்ப்பாணம், ஏப். 13

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பிறக்கும் பிரசோற்பத்தி புதுவருடத்தில் மழை அதிகமாக இருக்கும் என்றும், உணவுப் பொருள் விளைச்சல் அதிகரிக்கும் எனவும் சோதிடரீதியாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நாணய வீழ்ச்சி, பொருளாதாரம் சீர்குலைதல், வெளிநாட்டுத் தொடர்புகளில் மாற்றம் ஏற்படுதல், வேலையில்லாமை, கொள்ளைகள் அதிகரித்தல், சிறு தானியங்கள் அதிக விளைச்சல், நெல் உற்பத்தி அதிகரிப்பு என்பவற்றுக்கு இடமுண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஆண்டில் வரி ஏற்றம் அரசு மக்கள் உறவில் விரோதம் உண்டாகுதல் எனபன குறித்தும் ஆருடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## நல்லூரில் இசை விழா

யாழ்ப்பாணம், ஏப்: 13

நல்லூரில் உள்ள பண்டாரக்குளம் மருதவளவு பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி இன்று சனிக்கிழமை தொடக்கம் நான்கு நாட்களுக்கு இசைவிழா நடைபெறவுள்ளது.

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினரின் ஆதரவில் இந்த நான்கு நாள் இசை விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தினமும் இரு இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு இன்னிசை வழங்குவர். [அ]

## ஸ்ரீலங்கா ராணுவ லெப்டினன்ட் மரணம்

கொழும்பு, ஏப். 13

மூதூர், ஈச்சிலம்பற்றையில் அண்மையில் விடுதலைப் புலிகள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் உயிரிழந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரில் ஒருவர் அதிகாரியான லெப்டினன்ட் எம். டபிள்யு. பி. கே. [illegible]

---

# மரண அறிவித்தல்கள்

## திரு. கண்ணையா கிருபானந்தன்

[புங்குடுதீவு 10]

கொழும்பு கோட்டை ஜப்னா ஹோட்டல், புறக்கோட்டை ஸ்ரீலங்கா பாக்கு ஸ்ரோர்ஸ் நிறுவனங்களின் உரிமையாளர் திரு. கண்ணையா கிருபானந்தன் அவர்கள் கொழும்பில் 11 - 4 – 91 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் காலஞ்சென்ற கண்ணையா மனோன்மணி ஆகியோரின் அருமை மகனும், புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் காலஞ் சென்றவர்களான பொறளை நா. சி. செல்லையா, இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சுதந்திரதேவியின் அன்புக் கணவரும், வாசுகி, கிருபாரூபன், கிருபாகதன், கிருபாகரன், றம்யா ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், கிருபாமணி வைத்திலிங்கம், கிருபாராணி புலேந்திரன், கிருபாமலர் சண்முகலிங்கம், கிருபாராஜன், கிருபாநிதி, கிருபாநந்தினி, கிருபாறஞ்சினி, கிருபாறமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விவேகானந்தன், சத்தியமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி, பாரததேவி, முத்துலிங்கம், பாஸ்கரமூர்த்தி, தயாபரமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 13 – 4 – 91 சனிக்கிழமை காலை 11 மணியளவில் பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்!
22, கொழும்புத்துறை வீதி, செ. சத்தியமூர்த்தி
சுண்டிக்குளி, [மைத்துனர்]
யாழ்ப்பாணம். [16430]

---

## தில்லையம்பலம் மகேசன்

[இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்]

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் மகேசன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தில்லையம்பலம் தம்பதியினரின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், செல்வகுமாரன் [கனடா], சாந்தாதேவி, ஜெயந்தன் [அஸ்பெஸ்டஸ் லிமிட்., சுவிஸ்], ஜெயந்தி, வசந்தி [கனடா], சுகந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி சியாமளா தேவி [கனடா]. நாகராசா [கனடா] ஆகியோரின் அன்பு மாமனும், திரு. தவராசா [இளைப்பாறிய உத்தியோகத்தர், பதிவாளர் அலுவலகம் – தற்பொழுது கனடா] அவர்களின் அருமைச் சகோதரரும். திருமதி தவராசா [திருமணப் பதிவாளர், யாழ்ப்பாணம் - தற்பொழுது கனடா] அவர்களின் மைத்துனரும், பிரியதர்கினி ரவிராஜ் [கனடா], திலகராஜ் [இங்கிலாந்து], ரகுராஜ் [இங்கிலாந்து], சுரேந்திரராஜ் [கனடா], உதயதர்கினி [இங்கிலாந்து] ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-4-91 வியாழக்கிழமை மட்டுவிலில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு, தகவல்!
சாவகச்சேரி. [4012] திருமதி மகேசன்

---

## திருமதி வேலுப்பிள்ளை சிதம்பரம்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி சிதம்பரம் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு சங்கரப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வியும், கதிர்காமம் இராமகிருஷ்ணன் மிசனில் கடமையாற்றிய சபாரத்தினம், மங்கையக்கரசி [இங்கிலாந்து], தனலட்சுமி, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திய கலாநிதி சற்குரு [இங்கிலாந்து], க. விஸ்வலிங்கம் [இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்], மீனாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசீலன் [இங்கிலாந்து], சண்முகநாதன் [இங்கிலாந்து] ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் 374 நாவலர் வீதியில் ஈமக்கிரிகைகள் நடைபெற்று கோப்பாயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
[16337] க. விஸ்வலிங்கம்

---

## திருமதி துரைராஜா கோணேஸ்வரி

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஈச்சமோட்டை - கடற்கரை வீதி 20 ஆம் இலக்கத்தில் வசித்தவருமாகிய திருமதி துரைராஜா கோணேஸ்வரி 12 4-91 இல் அகால மரணமானார்.

இவர் துரைராஜாவின் அன்பு மனைவியும், மோகனராஜ் [சுவிஸ்] கிரிராஜ் [சுவிஸ்], லதா, இந்துலதா, உதயராஜ் ஆகியோரின் தாயாரும், சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா, சண்முகம், கனகரத்தினம், கதிரவேற்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், சுப்பிரமணியம், மகேஸ்வரி, நடராசா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13, வைரவர் கோவில் லேன், கொட்டடியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு மாலை 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
20 A, ஈச்சமோட்டை, N. சிவபாதசுந்தரம்
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம். [16336]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பல்கலைக்கழக பங்கு பணி

வடபகுதி விவசாயிகளுக்குத் தேவையான நல்லின விதை நெல் இனிக் கிளிநொச்சியிலேயே உற்பத்தி செய்யப்படும். யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் பிரஸ்தாப நெல்லினத்தை 48 ஏக்கர் பண்ணையில் விதைத்திருக்கிறது. வடபகுதியின் காலநிலைகளுக்கு ஏற்ப, அவற்றைத் தாக்குப் பிடித்து நல்ல விளைச்சல் தரக்கூடிய விதை இனமாக பிரஸ்தாப நெல் உருவாக்கப் பட்டிருக்கிறது.

அதன் பயனாக, வடக்கில் வளரக்கூடிய, அதிக விளைச்சல் தரவல்ல நல்லின நெல்லுக்கு இனிமேல் கண்டி விவசாய ஆராய்ச்சி நிலையத்தை எதிர்பார்க்க வேண்டியது இல்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சியில் உள்ள யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின், விவசாயபீடம் இயங்கத் தொடங்கிய குறுகிய காலத்தில் இப்படி ஒரு நற்பயன் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும். வடபகுதியின் கால நிலைக்குத் தாக்குப்பிடித்து, அதிக விளைச்சல் தரவல்ல புதிய பயிர்வகைகளை, மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்யவும், இப்போது உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய பயிர்களை விருத்தி செய்து அவற்றில் புதிய இனங்களைக் கண்டுபிடிக்கவும் விவசாய பீடம் செயலில் இறங்க வேண்டும்.

பல்கலைக்கழகம் ஒன்று வெறும் உயர் கல்வி நிலையமாக மட்டும் இருப்பதால் எவ்வித அர்த்தமுமில்லை; பயனுமில்லை. அது சமூகத்தின் ஓர் அங்கமாகி, தான் அமைந்திருக்கும் பகுதி மக்களினதும், பிரதேசத்தினதும், முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும், பங்காற்ற வேண்டும். தான் அமைந்திருக்கும் மண்ணின் வளம், மனித வளம் ஆகிய இரண்டையும் எவ்வாறு தக்கபடி பயன்படுத்தி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம், வாழ்க்கை வசதிகளை அதிகரிக்கலாம் என்பதை ஆராய்ந்து நடைமுறை ரீதியாகச் செயற்படுத்த உதவ வேண்டும்.

வெறுமனே பட்டதாரிகளை உருவாக்கித் தள்ளுவதாலோ அல்லது நடைமுறைக்கு உதவாத ஏட்டளவிலான ஆய்வுகள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாலோ பயன் எதுவும் இல்லை.

தான் பயிற்றுவிக்கும் மாணவர்கள், மண்ணுக்கும், மக்களுக்கும் உழைப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு. கீழ்மட்ட மக்களின் மேம்பாட்டுக்கு ஸ்தாபன ரீதியாகத் தானும் உதவ வேண்டும் என்ற இலக்குடனும் பல்கலைக்கழகம் உழைக்க வேண்டும்; இயங்க வேண்டும்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் அந்தத் திசையில் வழிநடப்பது மிகவும் குறைவே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதே வரிசையில் சேர்ந்து விடாமல் மக்களுக்கும், மண்ணுக்கும் ஆற்றவேண்டிய பங்களிப்பை நல்க வேண்டும் என விழைகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகமும், அங்குள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் இவ்விடயத்தில் தங்களுக்கெனத் தனி முத்திரை குத்திக்கொள்ள முனைவார்கள் என்று நம்புகிறோம்.

# மருந்துவகைகளின் விலைகள் இடத்துக்கிடம் வேறுபாடு

## ஒரே சீராக நிர்ணயிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 13

தனியார் மருந்துச் சாலைகளில் மருந்துவகைகளின் விலைகள் இடத்துக்கு இடம் வேறுபட்ட நிலையில் விற்பனையாகி வருகின்றன. பொது மக்களின் நன்மை கருதி விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

இப்படியான கோரிக்கை ஒன்றை யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள் விடுத்தனர்.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் திணைக்களத் தலைவர்களுடன் தனியார் வைத்திய சாலை, மருந்துச்சாலை உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

போதுமான அளவு மருந்து வகைகள் தனியார் மருந்துச் சாலை உரிமையாளர்களால் கப்பலில் கொண்டு வரப்பட்டும் விலை குறையவில்லை. மாறுபட்ட விலைகளில் மருந்து வகைகள் விற்பனையாகின்றன. அரச அதிபர் இது குறித்து நடவடிக்கை எடுத்து விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. [இ-3]

## 12,500 சிங்கள மாணவரின் விருப்பு மொழி தமிழ்

கடந்த ஆண்டு நாட்டின் தென்பகுதியில் நடத்தப் பட்ட ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 12 ஆயிரத்து 500 சிங்கள மாணவர்கள் விருப்புமொழியாக தமிழ் மொழியை எடுத்தனர்.

பததாயிரம் தமிழ் பேசும் மாணவர்கள்விருப்பு மொழியாகசிங்களத்தை எடுத்தனர்.

81 ஆயிரம் மாணவர்கள் விருப்பு மொழியாக ஆங்கிலத்தை எடுத்தனர் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார். [இ-எ]

## வளைகுடாவில் முறையான யுத்த நிறுத்தம் அமுலில்

வளைகுடாப் போர் பற்றிய முறையான யுத்த நிறுத்தம் நேற்று வெள்ளி அதிகாலை 3-30 மணி முதல் அமுலுக்கு வந்திருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் நேற்று அறிவித்தார்.

வளைகுடாப் போர் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமானது.

ஆரம்பத்தில் குவைத்தில் இருந்து வெளியே மறுத்த ஈராக் மீது அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படைகள் வான் தாக்குதலை நடத்தி வந்தன. இரண்டு மாத முடிவில் ஈராக் மீதான தரை யுத்தத்தை பன்னாட்டுப் படைகள் ஆரம்பித்த நூறாவது மணித்தியாலத்தில் தற்காலிக யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

அதன் பின்னர் முறையான யுத்த நிறுத்தம் ஒவ்வொறு கடும் நிபந்தனைகளுடன் ஐ. நா. பாதுகாப்புச் சபை அறிவித்தது.

போரில் தோல்வி கண்ட ஈராக் வேறு வழியின்றி அந்த நிபந்தனைகளை ஏற்பதாக அறிவித்தது.

பேரழிவு தரும் ஆயுதங்களை அழிப்பது, யுத்த நஷ்டஈடுகளை வழங்குவது உட்பட சகல நிபந்தனைகளையும் ஏற்பதாக 2 வரிக் கடிதம் ஒன்றை ஈராக் உத்தியோக பூர்வமாக ஐ நாவுக்கு அனுப்பி வைத்தது

அதனைத் தொடர்ந்தே ஐ நா. முறையான யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது. [இ-எ]

## அமெரிக்கப் படை வாபஸ் உடனடியாக ஆரம்பம்

தெஹ்ரான், ஏப்ரல் 12

வளைகுடாவில் உத்தியோக பூர்வமாக யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, தெற்கு ஈராக்கில் நிலைகொண்டுள்ள ஒரு லட்சம் வரையிலான அமெரிக்கப் படை வீரர்களைத் திருப்பி அழைக்கும் வேலையை அமெரிக்கா உடனடியாக ஆரம்பித்துள்ளது.

இம் மாதம் முடிவினுள் அனைத்துப் படையினரும் வாபஸ் வாங்கப்பட்டு விடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## தென். சென்னைத் தொகுதி இம்முறை அ.தி.மு.க.வுக்கு

சென்னை ஏப்ரல் 13

எதிர்வரும் லோகசபைத் தேர்தலில் தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் போட்டியிடவுள்ள 28 தொகுதிகள் எவை, அ. தி. மு. க. போட்டியிடவுள்ள 11 தொகுதிகள் எவை என்ற விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

கடந்த 1989 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தான் போட்டியிட்ட தென். சென்னை தொகுதியை இம்முறை அ. தி. மு. க. வுக்கு விட்டுக் கொடுத்துள்ளது.

சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு க.போட்டியிடும் 166 தொகுதிகள் மற்றும் காங்கிரஸ் போட்டியிடும் 66 தொகுதிகள் பற்றிய விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. [இ-எ]

## 2,400 படமாளிகைகளுக்கு தமிழ்நாட்டில் மூடுவிழா

சென்னை, ஏப்ரல் 13

தமிழ்நாட்டில் நேற்று முதல் சுமார் 2400 படமாளிகைகள் காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளன.

படமாளிகை உரிமையாளர்களுக்கும், படவிநியோகஸ்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு தீர்க்கப்படாததைத் தொடர்ந்து படமாளிகை உரிமையாளர் சங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

படமாளிகைகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் குழு ஒன்றை நியமிக்க படவிநியோகஸ்தர்கள் சங்கம் முடிவு செய்ததை படமாளிகை உரிமையாளர் சங்கம் எதிர்த்துள்ளது. இதுவே இந்தப் பிணக்காகும். [இ-எ]

## புத்தாண்டில் கவிதை பட்டி மண்டபம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

புத்தாண்டு தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் கவிதைப் பட்டி மண்டப விழா ஒன்றை நடத்துகின்றனர்.

நல்லூரில் உள்ள கம்பன் கோட்டத்தில் பிற்பகல் மூன்று மணிக்கு திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் விழா ஆரம்பமாகும்.

கலைஞர்கள் என். கே. பத்மநாதன், எஸ். கேதீஸ்வரன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி விழாவில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கலாநிதி வித்துவான் க. நா. வேலனை நடுவராகக் கொண்டு, 'நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?' என்னும் பொருள் குறித்துப் பட்டி மண்டபம் நடைபெறும்.

பட்டி மண்டபத்தில் கவிஞர்கள் காரை. செ. சுந்தரம்பிள்ளை, கல்வயல் வே. குமாரசாமி, ஜெ. கி. ஜெயசீலன், சோ. பத்மநாதன் ச. வே. பஞ்சாட்சரம், நாக சிவசிதம்பரம் ஆகியோர் பங்குபற்றுவர். [அ]

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினதும் 39 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை தேசிய இல்ல மெய்வல்லுநர் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடைபெற உள்ளன.

14 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு நிலைய விளையாட்டு அரங்கில் வைபவங்கள் ஆரம்பமாகும்.

இறுதி நாளான 19 ஆம் திகதி மாலை 5-00 மணிக்கு பொதுக் கூட்டமும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். [இ]

## அரசின் நாடித்துடிப்பை அறியஉள்ளூராட்சித் தேர்தல்

### பி.பி.சி. செய்தியாளர் விமர்சனம்

கொழும்பு, ஏப்ரல் 13

எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நாட்டின் தென் பகுதியில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை உத்தியோகப்பற்றற்ற சர்வசன வாக்கெடுப்பாக ஜனாதிபதி பிரேமதாஸா கருதுகிறார்

இப்படி கொழும்பில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸா பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகின்றன.

இந்தக் காலத்தில் தனது ஆட்சி பற்றி மக்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவே ஜனாதிபதி பிரேமதாஸா உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முன்வந்துள்ளார் என்றும் திரு. மொறிஸ் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கம் முக்கிய கவனத்தைச் செலுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மருதடிவிநாயகர் தேர் நாளை

யாழ்ப்பாணம் ஏப்ரல் 13

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தேர்த் திருவிழா நாளை சித்திரைப் புதுவருடப் பிறப்பன்று நடைபெறுகிறது.

நாளை காலை பத்து மணிக்கு பஞ்சமுக விநாயகருக்கு விசேட தீபாராதனையுடன் வசந்த மண்டபப் பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் நண்பகல் 12 மணிக்கு தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

★ ★ ★

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவில் இரதோற்சவம் நாளை காலை 9 மணிக்கு இடம் பெறுகிறது. அதற்கு முன்னதாக காலை எட்டு மணிக்கு பஞ்சமுகார்ச்சனை நடைபெறும. [அ]

## மருதடியில் இலங்கை வங்கி விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

புத்தாண்டு தின விசேஷத்தை முன்னிட்டு, இலங்கை வங்கி மானிப்பாய் கிளையிலும், மருதடி விநாயகர் ஆலயத்தில் நிறுவப்படும் பிரஸ்தாப வங்கியின் விசேஷ கருமபீடத்திலும் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7-30 மணிமுதல் பிற்பகல் 1-30 மணி வரை சேமிப்புச் சான்றிதழ், நிலையான வைப்பு, சிறுவர் சேமிப்பு, சேமிப்பு வைப்பு ஆகியவை ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதடி விநாயகர் ஆலய விசேஷ கருமபீட திறப்பு விழா வைபவத்தில் சிறப்பு விருந்தினராகத் திரு. என். பூரணலிங்கம் கலந்து கொள்வார். [இ]

## தீவுப்பகுதியில் புகையிலை அறுவடை

புங்குடுதீவு, ஏப்ரல் 13

தீவுப்பகுதிகளில் தற்போது புகையிலை அறுவடை நடைபெற்று வருகின்றது.

புங்குடுதீவு, வேலணை, புளியங்கூடல், மண்டைதீவு ஆகியவற்றில் கணிசமான அளவே புகையிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவு கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு பல மடங்கு அதிகரித்துள்ளதால் போதிய வருமானத்தைப் பெறாமுடியாதிருக்கும் என புகையிலை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். [இ-131]

## படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட குறிகாட்டுவான்-நெடுந்தீவுப் படகுச் சேவை மீண்டும் தடைப்பட்டுள்ளது. [த - 111 - 131]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவுக் கடலினுள் தடம்புரண்ட பயணிகள் வான்

யாழ்ப்பாணம், ஏப் 13

பண்ணையில் இருந்து குறிகட்டுவானை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் வான் நேற்று மண்டைதீவுக்கும் மண்கும்பானுக்குமிடையில் தடம்புரண்டு கடலுக்குள் குடைசாய்ந்ததில் பிரயாணிகளில் சிலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நயினாதீவைச் சேர்ந்த ராஜபாலன் சகிதேவி [வயது 33], தர்மலிங்கம் பார்வதிப்பிள்ளை [வயது 70] ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஒ-15]

## பல்கலை எழுதுவினைஞர் பதவி:

# 6 வெற்றிடங்கள் மட்டுமே; 1,200 பேர் விண்ணப்பம்

யாழ்- பல்கலைக் கழகத்தில் சமயா சமய அடிப்படையில் ஆறு எழுது வினைஞர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார். ஆனால் இந்தப் பதவிக்கு ஆயிரத்து 200 பேர் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

மேற்கண்ட தகவலை பல்கலைக் கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தப் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

அதே போன்று பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆறு பேரின் இடத்துக்கு 700 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை தொழில் நுட்பவியலாளர்கள் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை 15 ஆம் திகதியும் நடைபெறவிருக்கிறது. [உ-3]

## மன்னாரில் எண்ணெய் ஆய்வு:

# இந்திய யோசனைக்கு இலங்கை பின்னடிப்பு

கொழும்பு, ஏப். 13

மன்னார் வளைகுடாவில் எண்ணெய்வள ஆய்வு பற்றிய இந்தியாவின் யோசனையில் கூறப்பட்ட சில அம்சங்கள் குறித்து இலங்கை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக கடந்த ஜனவரியில் வெளியுறவு அமைச்சர் என்ற முறையில் திரு. வி.சி. சுக்லா கொழும்பு வந்தபோது காணப்பட்ட உடன்பாட்டை தற்போது அமுல் நடத்துவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய யோசனை குறித்த இலங்கையின் பதிலை புதுடில்லி எதிர்பார்த்திருப்பதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை தயாரித்த எண்ணெய்வள ஆய்வு யோசனையிலும் பார்க்க வித்தியாசமானதாக இந்தியா தயாரித்த திட்டம் இருப்பதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

# இந்தியப் பொதுத் தேர்தல் மே 20,23,26 ஆம் திகதிகளில்

புதுடில்லி, ஏப் 13

இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் எதிர்வரும் மேமாதம் 20, 23, 26 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

ஹரியானா, உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றுக்கான சட்டசபைத் தேர்தல்களும் இத்திகதிகளில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், அஸாம் மற்றும் ஜம்மு – காஷ்மீர் ஆகிய மாநிலங்களின் சட்டசபை மற்றும் லோகசபைத் தேர்தல்களை நடத்துவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் கடைசித் திகதி ஏப்ரல் 26 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் ஏப்ரல் 27 இல் பரிசீலனை செய்யப்படும். திரும்பப் பெற்றுக் கொள்ளும் கடைசித் திகதி ஏப்ரல் 29 ஆகும்.

மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் உத்தியோகபூர்வ அறிவிப்பை அந்தந்த மாநில தேர்தல் தலைமை அதிகாரி வெளியிடுவார். என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# இரு போராளிகள் வீர மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 13

காரைநகரில் நேற்று நடந்த மோதலில் உத்தவா [தங்கவடிவேல் சந்திரகுமார் — வல்வெட்டித்துறை], சிவம் [முத்தையா சாந்குமார் — தாளையடி வத்திராயன்] ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

இரு போராளிகளது புகழுடல்களும் இன்று வடமராட்சி மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும் [ஒ]

# உடன்பாடு காண்பதில் திமு.க. - ஜனதாதள் இழுபறி

சென்னை, ஏப் 13

தமிழகத்தில் சட்டசபை மற்றும் லோகசபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பாக தொகுதி உடன்பாடு காணுவதில் தி.மு.க வுக்கும் ஜனதாதள் கட்சிக்கும் இடையே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக புதுடில்லியில் ஜனதாதள் உயர்தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்த தமிழ்நாடு ஜனதாதள் தலைவர்கள் சென்னையில் இருந்து நேற்று புறப்பட்டுச் சென்றனர்.

தி.மு.க. தலைவர்களில் ஒருவரான முரசொலி மாறனும் நேற்று புதுடில்லி சென்றார்.

இதற்கிடையில்—

மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட், தமிழ்நாடு போர்வேட் புளொக் ஆகிய கட்சிகளுடன் தி.மு.க. தொகுதி உடன்பாடு கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## பேராசிரியர் புல்ஜின்ஸ் கைது விவகாரம்:

# ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதி கைதாவார்?

1987 இல் பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, முந்திய அரசாங்கத்தில் பதவி வகித்த முக்கிய அரசியல்வாதி ஒருவரின் வாக்குமூலத்தை பதிவு செய்ய இரகசியப் பொலீஸார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்

அந்த அரசியல் வாதி தற்சமயம் வெளிநாட்டில் இருக்கிறார்.

கடத்தப்பட்ட பேராசிரியர் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக நான்கு ஆண்டுகளின் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் களுபோவில பகுதியைச் சேர்ந்த முதலாளி ஒருவரை இரகசியப் பொலீஸார் கைது செய்தனர். அவர் கொடுத்த தகவலிலிருந்து அப்போதைய அரசில் முக்கிய அரசியல் வாதியாக இருந்த ஒருவரின் ஆணைப்படிதான் பேராசிரியர் கடத்தப்பட்டார் என்று தெரியவந்துள்ளது

அந்த அரசியல் வாதி இலங்கை திரும்பினால் உடனே கைது செய்யப்படலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படி அவர் இலங்கை திரும்பாமலிருப்பின் இங்கு அவர் வகித்து வரும் அரசியல் ஸ்தானத்தை அவர் இழக்கலாம் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்படுகிறது

கைதாவதைத் தவிர்க்க அந்த அரசியல் வாதி இலங்கை திரும்பாமலேயே இருந்து விடுவார் என்று அவரின் விசுவாச ஆதரவாளர்கள் கூறியுள்ளனர். [உ-எ]

# படையினரைப் பாதுகாக்க தண்டனை தவிர்ப்புச் சட்டம்

## மீண்டும் கொண்டு வர அரசு முடிவு

கொழும்பு, ஏப் 13

தண்டனை தவிர்ப்புச் சட்டத்தின் கீழ் 1987 வரை வழங்கப்பட்ட சலுகைகளை அதற்கு பின்னரும் பாதுகாப்புப் படையினருக்கு வழங்குவது குறித்து அரசு தீவிர பரிசீலனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

24-7-1979முதல்31 12-1987 வரையான காலத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்புப் படையினர் மீது எவரும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடருவதைத் தடுக்கும் தண்டனை தவிர்ப்புச் சட்டத்தை அரசு 1988 இல் நிறைவேற்றியது.

அந்தச் சட்டத்தின் கீழ் 1987க்கு பின்னர் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதுள்ளது.

இப்போது 1987 முதல் பாதுகாப்பு படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து எவரும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடராமல் படையினரைப் பாதுகாப்பதற்கு 1988 இல் நிறைவேற்றப்பட்ட தண்டனை தவிர்ப்புச் சட்டத்தைத் தொடர்ந்து அமுலாக்கக்கூடியதாக திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. [உ-எ]

# இராஜகோபுரம்

பருத்தித்துறை, ஏப்ரல் 13

பருத்தித்துறை சிவன் கோவில் இராஜகோபுரம் சுமார் எட்டு லட்சம் ரூபா செலவில் பூர்த்தி அடைந்து உள்ளது.

சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் வர்ணம் பூசும் வேலைகள் ஆரம்பமாக உள்ளன. [இ-118]

# பொறுப்பதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ரணசிங்காவும் ஒருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பொலீஸாரின் சடலங்களை கடற்படையினர் கற்பிட்டிக்கு எடுத்துச் சென்றனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

# இலங்கை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னும் முடிவு செய்யவில்லை என்று சொன்னார்.

இதனிடையில் —

இனப் பிரச்சினை குறித்து மத்தியஸ்தம் செய்யுமாறு மலேசிய அரசிடம் கோரிக்கை எதுவும் விடப்படவில்லை என்று இலங்கை அரசு கொழும்பில் மறுத்திருந்தது தெரிந்ததே.

ஆனால் —

இனப்பிரச்சினையில் மலேசிய அரசு தலையிடுவது தொடர்பாக இலங்கை அரசின் விருப்பத்தை மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. செ. இராசதுரை, அந்நாட்டு அமைச்சர்களில் ஒருவரான சாமுவேல் மூலம் மலேசிய அரசுக்குத் தெரியப்படுத்தி [illegible] என்று இந்த பத்திரிகைச் செய்தி [illegible] றது. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அந்தோனிப்பிள்ளை- அந்தோனியாப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அந்தோனிப்பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை [இராசம்மா] 12-04-91 நேற்றுக் காலமானர்.

இவர் செல்வி, A M. ராணி [நுணசை வித்தியாலயம் மாதகல்], பிரான்சிஸ் சேவியர் [ஜேர்மன்], திருமதி மேரிகொன்செப்ரா, திருமதி மேரி லூர்து, பீற்றர் இம்மானுவல் [அரச நில அளவைப் பகுதி, கிளிநொச்சி], ஸ்ரனிஸ்லாஸ் ஜெயராஜா [பாங்கொங்] வசந்தி, சுகந்தி யூலி [பண்டிவிரிச்சான்] சுவேந்திரா [ஆசிரியர் கண்டி], ஆகியோரின் அன்புத் தாயாரும், [செலன் மரியநயகத்தின்] அன்புச் சகோதரியும், யேசுதாஸ், சவுந்தரம் [மெக்கானிக் சில்லாலை] ராயேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிற்றோ, றிற்றோ, நிற்றோ கவிற்றோ, தக்சிலா, மெலனி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 13-4-91 இன்று 3. 30 மணியளவில் சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை

தகவல்: பீற்றர்

[16339]

## திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை

ஈச்சமோட்டை விதானையார் வீதியைச் சேர்ந்த திருமதி திரேசம்மா அந்தோனிப்பிள்ளை அகால மரணமடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற மரியாம்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், குணரட்ணம் அந்தோனிப்பிள்ளையின் [குணநாயகம் - இளைப்பாறிய பதவி நிலை உத்தியோகத்தர்] அன்பு மனைவியும், ஜீவானந்தன் [கனடா] ஜெயானந்தன் [நோர்வே], பிரியதர்சினி [யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற நேசம், காலம்சென்ற இம்மானுவல், காலம்சென்ற இராசநாயகம் எட்வேர்ட். அரசரட்ணம், பாலசிங்கம் [கனடா], ராஜசிங்கம், செல்வி லூட்ஸ்மேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வி ஆன்மேரியின் [கனடா] அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், இன்று [13-4-91] மாலை 3-30 மணிக்கு, இல. 28, விதானையார் வீதி ஈச்சமோட்டையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குணரட்ணம் அந்தோனிப்பிள்ளை

28, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,

[16338[

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org